# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1867/7 - 2014 ජූනි මස 17 වැනි අඟහරුවාදා - 2014.06.17

1867/7 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 3/3/2/35

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு

இல.:LD/05/2006/E/494

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

(ஹோ/கிரிவத்துடுவ கனிஷ்ட வித்தியாலயத்திற்காக காணி எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பல்லேபத்துவை சிறு பிரிவில், இல. 603/சீ - மூனமலே/யக்கஹலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், கிரிவத்துடுவ கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக் கப்பட்ட 2013.07.04 ஆம் திகதிய කො: 9271 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.4060 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு:

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: யக்கஹலுகெலே; விபரம்: தோட்டம் இறப்பர் செய்கையொன்று காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: எஸ்.ஏ.டீ.டயஸ், இல. 117, பிரிவெனா வீதி, கல்கிசை; விஸ்தீரணம்: 0.4060 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014.08.21 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹோமாகமை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களது கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014.08.11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ.எஸ்.கே. கன்னங்கர,
பிரதேச செயலாளர்,
ஹோமாகம.

பிரதேச செயலகம்,
ஹோமாகம,
2014, யூன் 13.

7-34

---

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: GCF/ATH/CB/47/LR

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் இல.:03J/90/ LRB/184

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கி

றார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

(பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் டொரிங்ரன் வாய்க்காலை அண்டிய சதுப்பு நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக காணி எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரி கஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் திம்பிரிகஸ்யாய கிராம உத்தியோகத்தர் பிரிவில், கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல.40 திம்பிரிகஸ்யாய வட்டாரத்தில், திம்பிரிகஸ்யாய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.05.02 ஆம் திகதிய கொ: 9363 ஆம் இல. ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.0379 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு:

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: கஜுகஸ்ஓவிட்ட ; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0379 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு, இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல.3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்க ளையும் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

சீ.டப். அபேசூரிய,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக்
கட்டுப்படுத்தல்,சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.
திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவு.

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம் காணிஎடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான
கூட்டுத்தாபனம்,
இல.3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2014.

7-35